# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப.(ஓ).,**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 222/ந/2025, நாள் 08.01.2026

L. பஞ்சநதம்
தேவகோட்டை,
சிவகங்கை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
தேவகோட்டை நகராட்சி,
சிவகங்கை மாவட்டம். – எதிர்மனுதாரர்

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை, வெள்ளையன் ஊரணி, நாச்சியப்பன் தெரு, எண்.7–B என்கிற முகவரியில் வசிக்கும் திரு. L. பஞ்சநதம் என்பவரது 17.06.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.06.2025 அன்று பெறப்பட்டு, 222/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை, வெள்ளையன் ஊரணி, நாச்சியப்பன் தெரு, எண்.7–B என்கிற முகவரியில் வசிக்கும் திரு. L. பஞ்சநதம் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்துள்ள 17.06.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

> சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை டவுன், வள்ளியப்ப செட்டியார் ஊரணி, குளக்கால் வடகரை, மனை எண்.66–ஐ ஆக்கிரமிப்பு செய்து வசித்து வரும் கருப்பையா அவர்கள் மனைவி சரஸ்வதி அம்மாள் அவர்கள் டிரஸ்ட்டுக்கு பாத்தியப்பட்ட கோவில் பட்டா இடத்தில் காலி மனை எண். 66 குளக்கால் அருகில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி இருக்கிறார். எங்கள் டிரஸ்டும் அவருக்கு அந்த காலி மனையை எவ்வித கிரையமும் செய்து கொடுக்கவில்லை. பட்டாவும் டிரஸ்டு பெயரில் உள்ளது. அவரும் நகராட்சிக்கு தவறான ஆவணங்களை காண்பித்து நகராட்சியின் எவ்வித கட்டிட அனுமதியும் இல்லாமல் ஓட்டு வீடு கட்டிக் கொண்டு அதற்கான நகராட்சியின் சொத்து வரியையும் அவர் பெயரிலேயே பெற்று இருக்கிறார் என்பது தெரியவருகிறது.
>
> அந்த Period–ல் வரி விதிப்புக்கு அனுமதி கொடுத்த நகராட்சி அதிகாரி அவர்கள் டிரஸ்ட், சரஸ்வதி அவர்களுக்கு கிரையம் கொடுத்து இருக்கிறதா என்பதை பார்க்காமல் விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டு சொத்துவரி போட்டு இருக்கிறார் என்பதும் தெரியவருகிறது.

அதை வைத்து மின்சார அலுவலகத்தில் மின் இணைப்பும் அவர் பெயரிலேயே பெற்று இருக்கிறார்.

இதை மேற்கோள் காட்டி நகராட்சி அலுவலக ஆணையர் அவர்களுக்கு மேற்கண்ட தேதிகளில் பதிவு தபாலில் கடிதம் எழுதி சொத்து வரியை ரத்து செய்ய சொல்லி கேட்டபொழுது நகராட்சி அலுவலகம் அவருடைய சொத்து வரி விதிப்பை இதுநாள் வரை ரத்து செய்யவில்லை. டிரஸ்ட்டுக்கும் பதில் கடிதம் கொடுக்கவில்லை.

சரஸ்வதி அம்மாவின் மகன் சித்திரவேலு என்பவரும் நகராட்சி அலுவலகத்தில் அரசியல் செல்வாக்குடன் செயல்பட்டு உள்ளார் என அறிய முடிகிறது.

Trust Act–ன்படி Trust-க்கு சொந்தமான சொத்துக்களை இதர பிற நபர்களுக்கு டிரஸ்டிகள் விற்பனை செய்வதாக இருந்தால், டிரஸ்டின் நிர்வாக குழுவில் தீர்மானம் நிறைவேற்றி, அதன்பின் சம்பந்தப்பட்ட அரசு பதிவுதுறையின் அனுமதி பெற்றுத்தான் கிரையம் செய்து கொடுக்க முடியும். உண்மைநிலை இவ்வாறு இருக்க முந்தைய டிரஸ்ட் நிர்வாகிகள் சரஸ்வதி அம்மாவுக்கு ஏதோ அனுமதி கொடுத்தது போல் உற்பத்தி செய்த ஆவணங்களின் அடிப்படையில் உண்மையை மறைத்து சொத்து வரி ரசீதும், அதனை தொடர்ந்து தற்பொழுது குடிநீர் இணைப்பும் பெற்று இருக்கிறார்கள் என்பதும் தெரிகிறது.

சரஸ்வதி அம்மாவுக்கு நகராட்சி நிர்வாகம் அனுமதி கொடுத்த சொத்து வரி விதிப்பையும், குடிதண்ணீர் வரி விதிப்பையும் உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என காலிமனையின் உரிமையாளர் என்ற முறையில் நகராட்சி ஆணயாளர் அவர்களை மனுக்கள் வாயிலாகவும், நேரிலும் கேட்டுக் கொண்டோம்.

மேற்படி டிரஸ்டும் Religious Institution ஆகும். தேவகோட்டையில் உள்ள வள்ளி விநாயகர் கோவிலையும், அது சார்ந்த ஊரணியையும் நிர்வாகம் செய்து மேம்படுத்துவதை நோக்கமாக செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் இந்த மனுவை ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்." எனத் தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 27.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தேவகோட்டை நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. தேவகோட்டை நகராட்சி ஆணையரின் 20.08.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.01191/2025/அ1–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 பிரிவு 82–ன் கீழ் தேவகோட்டை நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து கட்டிடங்களுக்கும் வருவாய் ஈட்டும் வகையில் சொத்து வரி விதிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் திரு. எல். பஞ்சநாதன், டிரஸ்டி வள்ளியப்ப செட்டியார் ஊரணி வள்ளி விநாயகர் கோவில் டிரஸ்ட் இடத்தில் திருமதி சரஸ்வதி க/பெ. கருப்பையா என்பவர் பெயரில் 1994–ம் ஆண்டு மேற்கூரை வரிவிதிப்பு நகராட்சியால் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம் நடுவர், சென்னை அவர்களின் புகார் எண்.222/எம்/2025; நாள் 27.06.2025–ன் கீழ் திரு. எல். பஞ்சநாதன், டிரஸ்டி வள்ளியப்ப செட்டியார் ஊரணி வள்ளி விநாயகர் கோவில் டிரஸ்ட் இடத்தில் திருமதி. சரஸ்வதி

க/பெ. கருப்பையா என்பவர் கிரைய பத்திரம் இல்லாமல் சொத்துவரி, குடிநீர்வரி ஏற்படுத்தியவரை ரத்து செய்யகோரியுள்ளார்.

அதனை தொடர்ந்து தேவகோட்டை நகராட்சி ஆணையர் அவர்களின் ந.க.எண்.01191/2025/அ1, நாள்16.07.2025 தேதிய அறிவிப்பு கடிதத்தின் வாயிலாக திரு. எல்.பஞ்சநாதன், டிரஸ்ட் வள்ளியப்ப செட்டியார் ஊரணி வள்ளி விநாயகர் கோவில் டிரஸ்ட் தேவகோட்டை மற்றும் திருமதி. சரஸ்வதி க/பெ. கருப்பையா என்பவர்களுக்கு உரிய ஆவணங்களுடன் ஆணையரை நேரில் சந்தித்து விளக்கத்தினை எழுத்து பூர்வமாக அளிக்க அறிவிப்பு அனுப்பப்பட்டது.

அதன்பேரில் வள்ளியப்பச் செட்டியார் ஊரணி வள்ளி விநாயகர் கோவில் (பிரைவேட்) டிரஸ்ட் அவர்களின் 24.07.2025–ம் தேதிய கடிதத்தில் வள்ளியப்ப செட்டியார் ஊரணி மற்றும் வள்ளி விநாயகர் கோவில் பிரைவேட் டிரஸ்ட் தனக்கு சொந்தமான இடம் என்பதற்கு அனைத்து அசல் ஆவணங்களும் இணைத்து ஆணையருக்கு விண்ணப்பம் செய்துள்ளார்.

திருமதி. சரஸ்வதி, க/பெ. கருப்பையா, தேவகோட்டை கடிதம் நாள் 24.07.2025–ல் தானும், தனது குடும்பமும் பல ஆண்டுகளாக (31 ஆண்டு) கடந்து விட்ட நிலையில் எதிரிடை அனுபவ பாத்தியம் செய்து வருவதாகவும் நகராட்சி சார்பில் 01.04.1994 முதல் தொடர்ந்து சொத்துவரி செலுத்தி வருவதாகவும், மேலும் 18.12.1998 அன்று மின் இணைப்பு பதிவு கட்டணம் பெற்று மின்சாரம் வழங்கப்பட்டது எனவும், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலம் குடும்ப அட்டை பெற்று உள்ளதாகவும் தெரிவித்து உள்ளார். திருமதி. சரஸ்வதி அவர்கள் வரி ஏற்படுத்தியதற்கு எவ்வித ஆவணமும் பத்திரம், பட்டா போன்றவை சமர்ப்பிக்கவில்லை.

எனவே, இதுகுறித்து தேவகோட்டை நகராட்சி ஆணையர், வழக்கறிஞரிடம் சட்டகருத்துரு வழங்க அனுப்பிய ந.க.எண்.01191/2025/அ1, நாள் 19.08.2025 கடிதத்தில் திரு.எல். பஞ்சநதம், டிரஸ்டி வள்ளியப்ப செட்டியார் ஊரணி வள்ளி விநாயகர் கோவில் டிரஸ்ட், தேவகோட்டை என்பவர் திருமதி. சரஸ்வதி, க/பெ. கருப்பையா என்பவர்களுக்கு சொத்துவரி மற்றும் குடிநீர் இணைப்பு வழங்கியதை உடன் ரத்து செய்து தரகோரியதை ஆராய்ந்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள உரிய கருத்துரு வழங்கிடுமாறு நகர்மன்ற வழக்கறிருக்கு கடிதம் அனுப்பப்பட்டு கோப்பு தொடர் நடவடிக்கையில் உள்ளது என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. " என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் திரு. L. பஞ்சநதம் மற்றும் எதிர்மனுதாரரான தேவகோட்டை நகராட்சி ஆணையர் ஆகியோரை 09.10.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 26.09.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. L. பஞ்சநதம் என்பவர் 09.10.2025 அன்று நடைபெற்ற விசாரணையின் போது தாக்கல் செய்த கடிதத்தில் தனக்காக ஆஜராக வழக்கறிஞர் திரு. F. இருதய லெனின் ராஜ் என்பவரை தனது மனுமீது வாதம், எதிர்வாதம் செய்ய, ஆவணங்கள் சமர்ப்பிக்க, உத்தரவு நகல் பெறுவதற்கு அதிகாரம் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மனுதாரர் திரு. L. பஞ்சநதம் மற்றும் அவரது வழக்கறிஞர் திரு. F. இருதய லெனின் ராஜ் ஆகியோர் 9.10.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

" L. பஞ்சநதம் என்கின்ற நான், சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை டவுன், வள்ளியப்ப செட்டியார் ஊரணி மற்றும் வள்ளி விநாயகர் கோயில் (பிரைவேட்) டிரஸ்ட் என்ற அமைப்பில் அறங்காவலராக இருந்து வருகிறேன். மேற்படி வள்ளியப்ப செட்டியார் ஊரணி மற்றும் வள்ளி விநாயகர் கோயில் (பிரைவேட்) டிரஸ்ட்டுக்கு சொந்தமான குளக்கால் அருகில் உள்ள மனை எண்.66–ஜ திருமதி. சரஸ்வதி க/பெ திரு. கருப்பையா என்பவரால்

ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, வீடு கட்டப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள மேற்படி இடத்திற்கான பட்டா, வள்ளியப்ப செட்டியார் ஊரணி மற்றும் வள்ளி விநாயகர் கோயில் (பிரைவேட்) டிரஸ்ட்டின் பெயரில் உள்ளது. மேற்படி இடத்தை திருமதி. சரஸ்வதி அம்மாள் என்பவருக்கு வள்ளியப்ப செட்டியார் ஊரணி மற்றும் வள்ளி விநாயகர் கோயில் டிரஸ்ட் மூலம் எந்தவித கிரையமும் செய்து கொடுக்கவில்லை.

திருமதி. சரஸ்வதி என்பவர் நகராட்சிக்கு தவறான ஆவணங்கள் சமர்ப்பித்து நகராட்சியின் கட்டிட அனுமதியில்லாமல் ஓட்டுவீடு கட்டிக்கொண்டதோடு, அவரது பெயரில் சொத்துவரியினை நகராட்சிக்கு செலுத்தி வருகிறார்.

நகராட்சி அலுவலர்கள் மேற்படி இடத்திற்கு எங்களது டிரஸ்ட் கிரையம் செய்து கொடுத்துள்ளதா என விசாரிக்காமல் சொத்துவரியினை திருமதி. சரஸ்வதி என்பவரின் பெயருக்கு போட்டு கொடுத்துள்ளனர். இதனடிப்படையில் திருமதி. சரஸ்வதி அம்மாள் என்பவரின் பெயருக்கு மின் இணைப்பும் பெறப்பட்டுள்ளது.

Trust Act–ன்படி டிரஸ்ட்டுக்கு சொந்தமான சொத்துக்களை பிறருக்கு விற்பனை செய்வதாக இருந்தால் டிரஸ்ட்டின் நிர்வாக குழுவில் தீர்மானம் நிறைவேற்றி, பதிவுத் துறையின் அனுமதி பெற்று கிரையம் செய்து கொடுக்க வேண்டிய நிலையில், திருமதி. சரஸ்வதி என்பவர் முந்தைய டிரஸ்ட் நிர்வாகிகள் மூலம் அவரது மூதாதையர் பெயருக்கு அனுமதி கொடுத்தது போல் ஆவணங்களை தயாரித்து சொத்துவரி, குடிநீர் இணைப்பு மற்றும் மின் இணைப்பு போன்றவற்றை பெற்றுள்ளார்.

தமிழ்நாடு இந்து சமய அறக்கொடைகள் மற்றும் ஆட்சி சட்டம், 1959, பிரிவு 109–ன்படி ஆக்கிரமிப்பாளர் எதிரிடைப் பாத்தியம் உரிமை கோர இயலாது. மேலும், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 மற்றும் வரிவிதிப்பு சட்டம், 1966–ன்படி சொத்தின் உரிமையாளர் தவிர மற்ற நபர்கள் மீது சொத்துவரி விதிப்பு விதிக்க இயலாது என்பதால், வள்ளியப்ப செட்டியார் ஊரணி மற்றும் வள்ளி விநாயகர் கோயில் (பிரைவேட்) டிரஸ்ட் பெயரில் உள்ள இடத்திற்கு தவறான ஆவணங்களின் அடிப்படையில் திருமதி. சரஸ்வதி என்பவரின் பெயரில் வழங்கப்பட்டுள்ள சொத்து வரியினை ரத்து செய்யவும், குடிநீர் இணைப்பையும் துண்டிக்கவும் நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறும், தவறான ஆவணங்களின் அடிப்படையில் சொத்துவரி நிர்ணயம் செய்து கொடுத்த தேவகோட்டை நகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை கேட்டுக்கொள்கிறோம்." என தெரிவித்துள்ளார்.

6. மேலும், மனுதாரர் திரு.எல். பஞ்சநதம் என்பவர் விசாரணையின்போது தாக்கல் செய்த 08.10.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு விவரங்களையும் சமர்ப்பித்துள்ளார்.

நகராட்சி ஆணையாளர் கூறியபடி நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து கட்டிடங்களுக்கும் வருவாய் ஈட்டும் வகையில் சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் என இருந்தால், அதே பகுதியில் உள்ள மற்ற பிறக் கட்டிடங்களுக்கு பாத்தியப்பட்ட மேற்படி டிரஸ்ட்டு பெயரில் நகராட்சி வருவாய் பிரிவால் வழங்கப்பட்ட வரி விதிப்பு எண். 110/011/02748 முதல் 02844 (மொத்தம் 59 நம்பர்) பின்னர் மாற்றம் ஆகி 110/007/900967 முதல் 110/007/901065 (மொத்தம் 44 நம்பர்) தற்பொழுது இருக்கிறது. எவ்வித முன் அறிவிப்பு இன்றி 15 நம்பர் அசஸ்மெண்ட் நகராட்சி வருவாய் துறையினரால் ரத்து செய்யப்பட்டு இருக்கிறது. ஏன் என்று தெரியவில்லை.

அத்துடன் வாடகைக்கு இருப்பவர்களுக்கு வசதி செய்து கொடுக்கலாம் என்று கருதி வரிவிதிப்பு செய்த கட்டிடங்களுக்கு வரிவிதிப்பு ரசீதில் உள்ள டிரஸ்ட் பெயரில் புதிய குடிநீர் இணைப்புக்கு 21.09.2024 அன்று விண்ணப்பித்து இருந்தோம். (நகராட்சி அலுவலக குறிப்பு ந.க.எண்.1464/தேதி 09.10.2024) அதற்கும் நகராட்சி ஆணையாளர்

அவர்களிடமிருந்து இணைப்பு ஏதும் வழங்கப்பட இயலாது என்று விண்ணப்பத்தை நிராகரித்துவிட்டார்கள். (குறிப்பு ந.க.எண்1491/2024/இ2 தேதி 22.11.2024 ).

அவ்வாறு இருக்கும்பொழுது சரஸ்வதி அம்மாவுக்கு மட்டும் எவ்வாறு குடிநீர் இணைப்பு கொடுத்தார்கள் என தெரியவில்லை. ஒன்றரை வருடத்திற்கு முன்னர் தான் கொடுத்துள்ளார்கள். பட்டாவுடன் கூடிய டிரஸ்ட்டுக்கு பாத்தியப்பட்ட சொத்தை ஆக்கிரமிப்பு செய்து எவ்வித சொத்து கிரயமும், நகராட்சி கட்டிட அனுமதியும் இல்லாமல் கட்டப்பட்டுள்ள இக்கட்டிடத்திற்கு மட்டும் (மனை எண்.66) மேற்கூரை வரி விதிப்பு செய்து இருப்பதை நியாயப்படுத்த முடியாது. அத்துடன் ஆக்கிரமிப்பு செய்த இடத்தில் தனக்கென்று ஒரு வீடும், அதற்கு அருகாமையில் ஒரு வீடு கட்டி, அதை வாடகைக்கு விட்டு வாடகையை அவரே வசூல் செய்து கொண்டு இருக்கிறார். மேற்படி மேற்கோப்புகளும் Unauthorized Buildings ஆகும். உரிமையாளர் இடத்திற்கு ஆக்கிரமிப்பாளர் பெயரில் வரிவிதிப்பு ஏற்படுத்த முடியாது. ஆக்கிரமிப்பு செய்த இடத்தில் சரஸ்வதி அம்மாவும் டிரஸ்ட்டுக்கு எவ்வித தரை வாடகையும் செலுத்தவில்லை. TNHR&CE Act, Section 109–ன் கீழ் கோவில் இடங்களுக்கு அனுபவ பாத்தியம் ஏற்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. சரஸ்வதி அம்மா ஆக்கிரமிப்பு செய்த காலத்தில் இருந்து ஆக்கிரமிப்பாளரை அகற்ற டிரஸ்டின் முன்னால் நிர்வாகிகள், நகராட்சி, அரசு பிற துறைகள், காவல் துறை அனைத்துக்கும் பல மனுக்கள் அனுப்பி, பல முயற்சிகள் எடுத்தும், எவ்வித பயனும் இல்லாமல் பல ஆட்சேபனைகள் தெரிவித்தும், தோற்றுவிட்டார்கள். எனவே எதிரிடை அனுபவ பாத்தியம் என்பதையும் நியாயப்படுத்த முடியாது. சொத்துவரி, குடிநீர் இணைப்பு ஆகியவற்றினை டிரஸ்டின் பேரில் ஏற்படுத்தி தரவேண்டியுள்ளது.

மேற்படி ஆக்கிரமிப்பு செய்த இடம் முற்றிலும் கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவர் மன்றம் விசாரித்து ஆக்கிரமிப்பு செய்த திருமதி. சரஸ்வதி, க/பெ. கருப்பையா பெயரில் உள்ள சொத்துவரி, குடிநீர் இணைப்பு ரத்து செய்ய தேவகோட்டை நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு ஆணையிடுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். " என தெரிவித்துள்ளார்.

7. எதிர்மனுதாரரான தேவகோட்டை நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.1191/ 2025/அ1, நாள் 07.10.2025–ல் தான் சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை நகராட்சி ஆணையராகவும், இராமநாதபுரம் மாவட்டம் கீழ்க்கடை நகராட்சி ஆணையர் கூடுதல் பொறுப்பாகவும் பணியாற்றி வருவதால் 09.10.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரில் ஆஜராவதிலிருந்து விலக்கு அளிக்குமாறும், மேற்படி விசாரணையில் நகராட்சி மேலாளர் திரு. மு. பத்மநாபன் மற்றும் நகராட்சி வருவாய் ஆய்வாளர் திரு. இரா. முத்துக்கிருஷ்ணன் ஆகியோரை அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதைத் தொடர்ந்து 09.10.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நகராட்சி மேலாளர் திரு. மு. பத்மநாபன் மற்றும் நகராட்சி வருவாய் ஆய்வாளர் திரு. இரா. முத்துக்கிருஷ்ணன் ஆகியோர் நேரில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளனர்.

"தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 பிரிவு 82–ன் கீழ் வருவாய் ஈட்டும் நோக்கில் அனைத்து கட்டிடங்களுக்கும் சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் தேவகோட்டை, வடக்கு பகுதி, கிழக்கு வீதி, வள்ளியப்ப செட்டியார் ஊரணி, கதவு எண்.7 (மனை எண் 66)–ல் வசித்துவரும் திருமதி. சரஸ்வதி, க/பெ. கருப்பையா என்பவரின் ஒட்டு வீட்டிற்கு அவரது பெயரில் 1994–ம் ஆண்டு மேற்கூரை வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது.

திருமதி. சரஸ்வதி அம்மாள் என்பவர் வசித்து வரும் இடம் வள்ளியப்ப செட்டியார் ஊரணி மற்றும் வள்ளி விநாயகர் கோயில் பிரைவேட் டிரஸ்ட்டிக்கு சொந்தமானது என்பதற்கான அசல் ஆவணங்களை நகராட்சிக்கு சமர்ப்பித்து, திருமதி. சரஸ்வதி அம்மாள் பெயரில் உள்ள

சொத்துவரி மற்றும் குடிநீர் இணைப்பு ரத்து செய்யுமாறு திரு. L. பஞ்சநாதம் என்பவரால் கோரப்பட்டது.

மேற்படி இடமானது தனியாருக்கு சொந்தமானதாக உள்ளதாலும், 1994–ல் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளதாலும், இப்பிரச்சினை உரிமையியல் சார்ந்ததாகும் எனவும், எதிரிடை அனுபவபாத்தியம் மற்றும் வசிப்பு ஆவணங்களின் அடிப்படையில் மாண்புமிகு நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டியது எனவும் திருமதி. சரஸ்வதி என்பவரால் தெரிவித்துள்ளதாலும், இவ்விடத்திற்கு விதிக்கப்பட்டுள்ள சொத்துவரியினை ரத்து செய்வது மற்றும் குடிநீர் இணைப்பை துண்டிப்பது குறித்து ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி அவசியம் உள்ளதால், இது குறித்து உரிய சட்ட கருத்துரு வழங்கிட நகர்மன்ற வழக்கறிஞருக்கு கடிதம் 19.08.2025–ல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நகர்மன்ற வழக்கறிஞரிடமிருந்து பெறப்படும் சட்டக் கருத்தின் அடிப்படையில் திருமதி. சரஸ்வதி என்பவரின் பெயரில் உள்ள சொத்துவரி ரத்து செய்வது மற்றும் குடிநீர் இணைப்பு துண்டிப்பது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை தெரிவிப்பதுடன், அதற்கு 15 நாட்கள் அவகாசம் வழங்கும்படி மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக்கொள்கிறோம்." என தெரிவித்துள்ளனர்.

8. மனுதாரர் திரு L. பஞ்சநாதம் என்பவரின் புகார் மனு, கடிதம், மனுதாரர் மற்றும் மனுதாரரின் வழக்கறிஞர் திரு. F. இருதய லெனின் ராஜ் ஆகியோரின் வாக்குமூலங்கள், எதிர்மனுதாரரான தேவகோட்டை நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி மேலாளர் மற்றும் நகராட்சி வருவாய் ஆய்வாளரின் வாக்குமூலங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

வள்ளியப்ப செட்டியார் ஊரணி & விநாயகர் கோயில் (பிரைவேட்) டிரஸ்ட் ஒரு Religious Institution என்பதும், தேவகோட்டையில் உள்ள வள்ளி விநாயகர் கோவிலையும், அது சார்ந்த ஊரணியையும் நிர்வாகம் செய்து மேம்படுத்துவதை நோக்கமாக செயல்பட்டு வருவதும், இந்த டிரஸ்ட்டுக்கு பாத்தியப்பட்ட வள்ளியப்ப செட்டியார் ஊரணி குளக்கால் வடகரை எண். 66–ல் உள்ள பட்டா மனையை எவருக்கும் எவ்வித கிரையமும் செய்து கொடுக்காத நிலையில், மேற்படி இடத்தை திருமதி சரஸ்வதி அம்மாள் என்பவர் ஆக்கிரமித்து நகராட்சியின் கட்டிட அனுமதியின்றி ஓட்டு வீடு கட்டிக் கொண்டு நகராட்சிக்கு தவறான ஆவணங்களை சமர்ப்பித்து விதிமுறைகளை மீறி தனது பெயருக்கு சொத்து வரி, மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு ஆகியவற்றை பெற்றுள்ளதை ரத்து செய்ய வள்ளியப்ப செட்டியார் ஊரணி & விநாயகர் கோயில் (பிரைவேட்) டிரஸ்ட் சார்பாக மனுதாரரால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதும் மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுதாரர் மற்றும் மனுதாரரின் வழக்கறிஞரின் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

நகராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையில் தேவகோட்டை நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து கட்டிடங்களுக்கும் சொத்து வரி விதிக்கப்பட வேண்டும் என்பதால் டிரஸ்டி வள்ளியப்ப செட்டியார் ஊரணி வள்ளி விநாயகர் கோவில் டிரஸ்ட் இடத்தில் வசித்துவரும் திருமதி சரஸ்வதி என்பவர் பெயருக்கு 1994–ம் ஆண்டு நகராட்சியால் மேற்கூரை வரிவிதிப்பு விதிக்கப்பட்டுள்ளது என்பதும், வள்ளியப்ப செட்டியார் ஊரணி வள்ளி விநாயகர் கோவில் பிரைவேட் டிரஸ்ட்க்கு சொந்தமான இடம் என்பதற்கான அனைத்து அசல் ஆவணங்களும் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதும், எந்தவித ஆவணங்களும் சமர்ப்பிக்காத திருமதி. சரஸ்வதி என்பவரின் கடிதத்தில் 1994–ல் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளதால், இப்பிரச்சினை உரிமையியல் சார்ந்ததாகும், எதிரிடை அனுபவபாத்தியம் மற்றும் வசிப்பு ஆவணங்களின் அடிப்படையில் மாண்புமிகு நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டியது என தெரிவிக்கப்பட்டுள்ளதால், இச்சொத்துவரி மற்றும் குடிநீர் இணைப்பை துண்டிப்பது தொடர்பாக சட்ட கருத்துரு பெற நகர்மன்ற வழக்கறிஞருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதும் தேவகோட்டை நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி மேலாளர் மற்றும் நகராட்சி வருவாய் அலுவலர் ஆகியோரின் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

7

இந்நேர்வில், நகராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையில் தேவகோட்டை நகராட்சி பகுதியில் உள்ள வள்ளியப்ப செட்டியார் ஊரணி வள்ளி விநாயகர் கோவில் பிரைவேட் டிரஸ்ட்க்கு சொந்தமான இடத்தில் வசித்துவரும் திருமதி சரஸ்வதி என்பவர் பெயருக்கு 1994–ம் ஆண்டு மேற்கூரை வரிவிதிப்பு விதிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி இடத்தில் வசித்து வருபவரின் பெயரிலுள்ள சொத்துவரி மற்றும் குடிநீர் இணைப்பை துண்டிப்பது தொடர்பான, இப்பிரச்சினை உரிமையியல் சார்ந்தது என்பதாலும், எதிரிடை அனுபவபாத்தியம் மற்றும் வசிப்பு ஆவணங்களின் அடிப்படையில் மாண்புமிகு நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டியது என்பதாலும், சொத்துவரி மற்றும் குடிநீர் இணைப்பை துண்டிப்பது தொடர்பான இப்பிரச்சினை குறித்து நகர்மன்ற வழக்கறிஞரிடம் சட்ட கருத்துரு பெற்று நடவடிக்கை மேற்கொள்ள உள்ளதாக தேவகோட்டை நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி மேலாளர் மற்றும் நகராட்சி வருவாய் அலுவலர் ஆகியோரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதை ஏற்று, நகர்மன்ற வழக்கறிஞரிடம் சட்ட கருத்து பெற்று, அரசு விதிமுறைகளுக்குட்பட்டு உரிய நடவடிக்கையை விரைந்து மேற்கொள்ள தேவகோட்டை நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 8–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. L. பஞ்சநதம்
எண்.7–B , நாச்சியப்பன் தெரு,
வெள்ளையன் ஊரணி, தேவகோட்டை,
சிவகங்கை மாவட்டம்–630 302

2) நகராட்சி ஆணையர்,
தேவகோட்டை நகராட்சி,
சிவகங்கை மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை–600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.